# பிரேமாவிற்கு எதிரான மனுவை நிராகரிக்குமாறு

## சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவை பதவியிலிருந்து நீக்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட மனுவை நிராகரிக்குமாறு பிரேமதாசாவுக்கு ஆதரவான 116 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 19 இதழ்: 205
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-9-1991

## சதி முயற்சி பின்னணியில் ஜே. ஆர். - கிளாஸ்ரோன்

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவுக்கெதிரான மனுவின் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், முன்னாள் பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளஸ்ரோனும்இருப்ப

[4ம் பக்கம் பார்க்க]

## மண்ணெண்ணை தடை நேற்று முதல் நீக்கம்

(யாழ்ப்பாணம்)
வடபகுதிக்கு மண்ணெண்ணை எடுத்துவர இதுவரை விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நேற்று முதல் நீக்கப்பட்டு விட்டதாக யாழ். செயலக உயர் அதிகாரி ஒரு

[4-ம் பக்கம் பார்க்க]

★ மணலாறு மாவட்டத்தில்

# விடுதலைப்புலிகள்-இராணுவம் தொடர்ந்து கடும் மோதல்

## 13 வேங்கைகள் வீரமரணம்

(மணலாறு)
மணலாறு மாவட்டத்தில் பல பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும்-சிறிலங்கா இராணுவத்துக்குமிடையே கடந்த மூன்று தினங்களாக கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இம்மாவட்டத்திலுள்ள நித்திகைக்குளம் பகுதியில விமானங்களின் உதவியுடன் தொடர்ந்து இராணுவத்தினர் நடத்திவரும் தாக்குதலை எதிர்த்து புலிகள் சளைக்காது போரிட்டுவருகின்றனர்.

மணலாறு மாவட்டத்திலுள்ள சகல இராணுவமுகாம்களிலிருந்தும் கடந்த முதலாம் திகதி முதல் வெளியே வரமுயலும் இராணுவத்தினரை முன்னேற விடாது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இம் மோதல்களின் போது

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆயுதம் அளித்ததாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)
இந்தியப்படைகளை எதிர்த்து போரிடும் வகையில் விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசா ஆயுதம் வழங்கியதாக அரச எதிர்ப்பாளர் குழுவின் முக்கியதலைவர்கள்கொழும்பில்

[4ம் பக்கம் பார்க்க]

## திருமதி ஸ்ரீமாவுவுக்கு பிரதமராகும் வாய்ப்பு

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான மனு வெற்றிபெறும் பட்சத்தில் எதிரணியால் அமைக்கப்படும் ஆட்சியில் திருமதி சிறிமாவோ

(4ம் பக்கம் பார்க்க)

## பதவி நீக்க மனு பற்றி

## மல்லிமராய்ச்சியே பிரேமாவிற்கு அறிவித்தார்

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான பிரேரணைக்கு கூடுதலான பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு

[4-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் சுவரொட்டிகள்

(கொழும்பு)
'ஜனாதிபதி பிரேமதாசாவை பதவியிலிருந்து நீக்க முயற்சிப்போரைப் படுகொலை செய்வோம்' என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் கொழும்பு மாநகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் படையினரால் தமிழர் பெரும் பாதிப்பு

(திருமலை)
சிறிலங்கா இராணுவத்தினரின் திட்டமிட்ட தாக்குதல் நடவடிக்கைகளால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

(2-ம் பக்கம் பார்க்க]

## அதிருப்தியாளர்கள் கலந்துகொள்ளவில்லை

(சென்னை)
ஆளும் ஐ. தே. கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரேமதாசாவுக்கு எதிரான மனுவில் கையெழுத்திட்டவர்கள் கலந்துகொள்ளவில்லை என நேற்றுக் காலை 'இந்திய வானொலி' தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற சில சட்ட சிக்கல்கள்

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான மனு பாராளுமன்றில் வாக்கெடுப்பிற்கு

(2-ம் பக்க பார்க்கம்]

## அமைச்சர் வின்சனும் விலகலாம்

(கொழும்பு)
பாராளுமன்ற விவகார அமைச்சர் திரு. வின்சன் பெரேரா அமைச்சரவையிலிருந்து விலகக்கூடிய சாத்தியமிருப்பதாகச் செய்திகள் பரவலாக அடிபடுகின்றன

இவரைவிட மேலும் சில ராஜாங்க அமைச்சர்களும் மதில் மேல் பூனையாக இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

[சி 153]

## கருத்துக் கணிப்பு நடாத்த பிரேமதாசா தயாராம்

(கொழும்பு)
இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்ந்தும் நீடிப்பதா அல்லது பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு மீண்டும் மாறுவதா என்பது குறித்து கருத்துக்கணிப்பு நடாத்த தயார் என ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில்

[4-ம் பக்கம் பார்க்க]

## ஜூலை ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)
ஜூலை மாத ஒய்வூதிய வவுச்சர்கள் இன்று தபால் மூலம் உரியவர்களுக்குக்கிடைக்குமென்றும், அதற்கு வேண்டிய பணம் அனைத்தும் யாழ். செயலகத்தின் மூலம் வங்கிகள் அனைத்துக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## வேலூர் தமிழீழமாநாட்டிற்கு தமிழக அரசு தடை

(சென்னை)
தமிழகத்தில் வேலூரில் இடம்பெறவிருந்த 'தமிழீழ' மாநாட்டிற்கு தமிழக அரசு தடை விதித்ததுடன், இம் மாநாட்டில் கலந்துகொள்ள வந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னைக்கு அருகில் வேலூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை

(4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் செயலுக்கு சுதந்திரக்கட்சி கண்டனம்

(கொழும்பு)
பாராளுமன்ற கூட்டத்தொடரை இம்மாதம் 24ம் திகதி வரை ஜனாதிபதி இடைநிறுத்தி வைத்துள்ளதைக்கண்டித்து ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

நேற்றுமுன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் இத்

(4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### வாங்க / விற்கப்படும்

பழையபுத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகை, போத்தல் வகைகள், உர, கோழித்தீன், சீமெந்து உறைகள், வெற்றுத் தகரங்கள் வாங்கப்படும். விற்கப்படும். சோ சேனாதிராசா, முகாமையாளர், இராமநாதன் பழைய புத்தகசாலை, 108, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். (சி–5168)

### சலவைக்கு புனலைக்காய்

புனலைக்காயை நீரிலிட்டு நுரைவரும்வரை அலசி அதனுள் துணிகளை ஊறவிட்டு துவைத்து அழுக்கைப்போக்கலாம். புனலைக்காய் ¼ கிலோ பக்கற் ரூபா 25/- யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில் அண்ணா கோப்பி கடைகளில் கிடைக்கும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ–1551)

### யந்திரம்

குடும்பப் பிரச்சினை, பாலியல் பலவீனம், உடம்பு மெலிதல், முயற்சிகள் தடைப்படுதல் போன்றவற்றிற்குச் செலவாக்கு யந்திரமும் கண்ணூறு நாவூறு யந்திரங்களும் வியாபார விருத்திக்கு ஸ்ரீமகாலட்சுமி, அட்டலட்சுமி யந்திரங்களும் பெறலாம். 10-9-91க்கு முன் சாதகத்துடன் நேரில் வரவும். ஸ்ரீலஸ்ரீ குருக்கள், மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, (அரசடிச் சந்தி) நல்லூர். யாழ்ப்பாணம். [சி–5259]


### ஓய்வூதிய வவுச்சர்

(மானிப்பாய்)

மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களின் ஆகஸ்ட் மாதத்திற்குரிய ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்களும அவற்றிற்குரிய காசோலைகளும் யாழ். செயலகத்திலிருந்து வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


## கூறுவிலை கோரல்

மூடிய கொப்பறையில் பனம்சீனி உற்பத்தி 1000 கிலோ / 500கிலோ சீனி உற்பத்திக்கான இயந்திரப் பொறி அமைப்பதற்கான கூறுவிலை கோரல்

மேற்படி தொடர்ச்சியாக இயங்கும் ஓர் பொறியை அமைப்பு செய்து தருவதற்கு இயந்திர உற்பத்திகள் செய்யும் கொம்பனிகளிடம் இருந்து கூறுவிலைகளைக் கோருகின்றோம். இவ் இயந்திரத்தின் மாதிரி வடிவமைப்பின் படப் பிரதியை யாழ். மாவட்ட கூ. அ. உ. ஆணையாளர் (ப. பொ) அவர்களை அணுகிப் பார்வையிடலாம். மேலதிக விபரமும் பெறலாம். எமது பிரதேச வனப் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு இத்தொழில்சார் நிறுவனங்களிடம் இருந்து இதற்கான கூறுவிலையை எதிர்பார்கின்றேன்.

கி. சிவநேசன்
பொது முகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ.ச. சமாசம்.
499, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (எ–1552)


## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செபமாலை ஆரோக்கியம்

தோற்றம்: 09-03-1929 மறைவு: 04-09-1989

''சீவியத்தில் நினைத்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்''

தனக்கென வாழா – தன்
மக்களுக்காய் வாழ்ந்து
விண்ணுலக அழைப்பை ஏற்று
மண்ணுலகை விட்டகன்ற
எம் அன்புத் தாயே!
ஆண்டவனிடத்தில் எமக்காக
வேண்டியருளும்

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கழாவடி,
ஆனைக்கோட்டை. [சி-5251]

# தியாகி திலீபன் ஞாபகார்த்த தடகள விளையாட்டுப் போட்டி 6ம் திகதி தொடக்கம் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகள் பக்கள் முன்னணியினால் நடாத்தப்படும் ''தியாகி திலீபன்'' ஞாபகார்த்த தடகள விளையாட்டுப் போட்டிகள் வட்டவை மட்டத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்களும் அதன் திகதிகளும் பின்வருமாறு:– இம்மாதம் 6ம், 7ம் திகதிகளில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

7ம், 8ம் திகதிகளில் சாவகச்சேரி மட்டுவில் மகாவித்தியாலயத்திலும், சங்கானை அராலி மாவத்தை விளையாட்டரங்கிலும் நடைபெறும்.

9ம், 10ம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், கரவெட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

10ம், 11ம் திகதிகளில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடைபெறும்.

11ம், 12ம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், நல்லூர் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும், பளை இத்தாவில் விளையாட்டரங்கிலும்நடைபெறும்.

12ம், 13ம் திகதிகளில் உடுவில் ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும், மருதங்கேணி செம்பியன்பற்று மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்,

இவை தவிர 15ம் திகதி ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான மரதனோட்டப் போட்டி சுன்னாகத்திலும் நடைபெறும்.

சைக்கிள் ஓட்டப்போட்டி 16ம் திகதி கோண்டாவிலில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் நடாத்தப்படும்.

17ம் திகதி வேகநடைப் போட்டி, ஆண்களுக்கும், பெண்களுக்கும் நல்லூரில் நடைபெறும். (வி)

## இலங்கை வானொலி மீது லலித் மனத்தாங்கல்

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தானும் மற்றைய அமைச்சர்களும் ராஜினாமாச் செய்ததுபற்றிய செய்திகளை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் முக்கியத்துவம் கொடுக்காமல் மறைத்துவருவதாக திரு. லலித் அத்துலத்முதலி ஆட்சேபம் தெரிவித்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத் தலைவருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்

முன்னாள் கல்வி அமைச்சர் என்ற முறையிலும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிற்கும் மற்றும் செய்திகளுக்கும் கூட்டுத்தாபனம் செய்திகள் வெளியிடாமல் மறைத்துள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி உத்தியோக பூர்வ அறிவித்தல் எதுவும் தமக்கு வழங்கப்படவில்லையென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

''கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்,
கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்''
(யோபு, 1:21)

### சின்னத்தம்பி ஜோசுவா

(East & West Express, Dammam, K. S. A.)

மலர்வு: 16-10-1963 உதிர்வு: 04-09-1990

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று [4-09-91) புதன்கிழமை காலை 11 மணியளவில் வட்டுக்கோட்டை எபனேசர் ஜெப நிலையத்தில் ஜெப ஆராதனை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மனைவி திருமதி ரீட்டா ஜோசுவா
மகன் ஜோசுவா ஜோய்
(சி-5263)

## 31ம் நாள் நினைவஞ்சலி



### வீர வேங்கை அலன்

[கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன்]

05-08-1991 அன்று ஆனையிறவு நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை அலனுக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

உன் பிரிவால் துயருறும்:
பெற்றோர்
சுரேஸ் குடும்பத்தினர்

இராசவடிவேல் வீதி,
வல்வெட்டித்துறை.
[சி-5257]

### நியமனம்

[கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபராகவும் பிரதேச சபையின் விசேட ஆணையாளராகவும் செல்வி இந்துமதி நியமனம் செய்யப்பட்டுள்ளார். (83)

### தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் என்றுமில்லாதவாறு குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (101)

### பிஸ்கட் தொழிற்சாலை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு உற்பத்திக் குழு குரக்கன் மாவிலிருந்து பிஸ்கட் தயாரிக்கும் தொழில் நிலையம் ஒன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

### மூன்றில் இரண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரும்போது பெறப்படவேண்டிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் பற்றிய எண்ணிக்கையில் சில சட்டச் சிக்கல்கள் எழுந்துள்ளதாம்.

பாராளுமன்றத்தில் மொத்தம் 225 உறுப்பினர்கள் உள்ளனர். எனவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற 150 வாக்குகள் தேவை. ஆனால் தற்போது பாராளுமன்றில் 13 இடங்கள் காலியாக உள்ளன.

எனவே தற்போதுள்ள நிலையில் 212உறுப்பினர்களே உள்ளதாகவும் இதன்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு 141 வாக்குகள் போதுமானதென்றும் கூறப்படுகிறது.

இதையடுத்து, இது பற்றிச் சட்ட வல்லுநர்கள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### திருமலையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிங்களக் குடியேற்றம், தொடர்ச்சியான ராணுவ தாக்குதல்கள் போன்றவற்றினால் தமது பாரம்பரிய பிரதேசங்களை விட்டு இம்மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இராணுவ அச்சுறுத்தல்களால் உடமைகள், நிலம், தொழில் ஆகியவற்றை இழந்து காடுகளில் வாழும் இம்மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.

# 45-ம் நாள் நினைவலைகள்



## லெப்டினனண்ட் அன்பன் மாஸ்ரர்

[முருகராசா ஸ்ரீதர்]

[22-7-91 அன்று கட்டைக்காட்டில் நடைபெற்ற மோதலில்
வீர மரணத்தை தழுவிக்கொண்டார்]

**வீர ஜனனம்: 12-06-1971** **வீர மரணம்: 22-07-1991**

அந்த நாளை எண்ணி எண்ணி அழுகிறோமடா - நீ
ஆடி திரிந்த பயிற்சி முகாமே சோகம் தானடா
அந்தி வானம் போல மனம் இருண்டதேனடா - உன்
அன்பை எண்ணி நாளும் நாங்கள் வாழுறோமடா

பயிற்ற வீரர் பாசம் நெஞ்சில் நிறையுதடா - உன்
பசுமை நினைவு எமது பணியை உயர்த்துதடா
உயர்ந்த உள்ளம் உனது என்று விளங்குதடா
உரிமை வெல்வோம் என்று நெஞ்சம் முழங்குதடா

வெறி பிடித்த நாய்களுடன் மோதினியடா - உன்
வெடிபிடித்து அவர்களன்று அடங்கிஞரடா
அறிவுரைக்கும் நண்பனுக பழகினையடா - உன்
அடி தொடர்ந்து நாங்களின்று செல்கிறோமடா

- நண்பர்கள்

(எ-1549)

# இந்திய அரசு கச்சதீவை மீண்டும்பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அ. தி. மு. க. உறுப்பினர் கோரிக்கை

(சென்னை)

கச்சதீவை இலங்கைக்கு அளிக்கும் 1972ம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு மீண்டும் கச்சதீவை இந்தியா பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மாநிலங்களவையில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அ. தி. மு க. உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டுவருவதாகவும் இதனல் இராமேஸ்வரம் கடற்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் உறுப்பினர்கள கட்சி வேறுபாடின்றி குரல் எழுப்பியுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு பல இந்திய மீனவர்கள் காயமடைந்துள்ளதாகவும் 100 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளதாகவும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்கள்.

மேலும் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டுமுள்ள இந்திய மீனவர் சம்பந்தமாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி நஷ்டஈடு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதை தடுக்கும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (க)

# இந்தியா - பாக். சண்டை 60 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்ற யுத்தத்தில் இரு தரப்பிலுமாக மொத்தம் 60 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையில் இருதரப்பினரும் தொலைபேசி மூலம் நடாத்திய பேச்சுவார்த்தையின் பயனாக நேற்று யுத்த நிறுத்தம்கடைப்பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது (க)

### வேலூர் தமிழீழ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாநாடு நடைபெற பெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. எனினும் மாநாடு ஆரம்பமாக முன்னர் அரசு இதற்கு தடை விதித்ததுடன் இதில் கலந்துகொள்ள தமிழகத்தின் பல பகுதிகளிலுமிருந்து வந்த பல பிரதிநிதிகளைக் கைதுசெய்தது.

மேலும் இம்மாநாடு நடைபெறவிருந்த மண்டபமும் பொலிசாரால் சீல் வைக்கப்பட்டது. (சி)

### புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேலும் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கும் விவகாரத்தில் தாமும் மறைந்த பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவும் எதிர்த்த போதும்கூட ஜனதிபதி பிரேமதாசா தமது முயற்சியைக் கைவிடவில்லை என்றும் திரு. அத்துலத் முதலி வலியுறுத்திக் கூறியுள்ளார். (க)

### இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலை இரத்த வங்கியில் நேற்று மட்டும் 24 பேர் இரத்ததானம் செய்தனர்.

பலாலி ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலை, கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிலையம், யாழ் மத்திய கல்லூரி, யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, யாழ். மருத்துவ பீடம் என்பவற்றைச் சேர்ந்த மாணவர்களும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளும் இரதித தானம் செய்தனர். (56)

# இலங்கையில் முதலீடு செய்ய வெளிநாடுகள் தயக்கம்!

(கொழும்பு)

இலங்கையில் முதலீடுகளைச் செய்யப் பல வெளிநாட்டு நிறுவனங்கள் தயக்கம் காட்டி வருகின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலையை அடுத்தே இந்நிலை எழுந்துள்ளது.

இது தொடர்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை அவசர மாநாடு ஒன்றை, வெளிநாட்டு நிறுவனங்களும், வர்த்தக அமைப்புக்களும் கொழும்பில் கூடி நிலைமைகளை ஆராய்ந்துள்ளன.

தொடர்ந்தும் நாட்டு நிலைமையை அவதானித்த பின்னரே, அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி முடிவெடுக்கவும் இவை தீர்மானித்துள்ளன. இம்முடிவு இலங்கைக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாமெனக் கருதப்படுகிறது. (சி)

### சதி முயற்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக அரசு தரப்பு பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சாதாரண பொதுமக்களிடமிருந்து உருவான தலைவர் திரு பிரேமதாசாவை விட பிரபுத்துவ குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்தச் சதி முயற்சியை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினர்.

எந்தக் கட்சியையும் சாராத அரசியல் விமர்சகர் ஒருவர் கூறுகையில்; உலகம் முழுவதும் ஜனநாயக சூறுவளி ஒன்று வீசுகிறது அதன் தாக்கமே இது என்றூர். (சி-153)

### மண்ணெண்ணை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் தெரிவித்தார்.

மேற்படி தடை நீக்கல் உத்தரவு, பாதுகாப்பு அமைச்சினல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டதென்றும் இதற்கான அறிவித்தல் நேற்று யாழ்.செயலகத்துக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை 5 மெட்ரிக்தொன் சவர்க்காரத்தை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்ட கப்பல் இன்று அல்லது நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையலாமென்றும் கூறப்படுகின்றது. (வி)

### கொழும்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளை, பிரேமதாசாவுக்கு ஆதரவாகவும், எதிராகவும் கொழும்பில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. [153]

### அதிருப்தியாளர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் மாலை இக்கூட்டம் நடைபெற்றது. இதில் மிகச்சிலரைத் தவிர 116 எம். பி.க்கள் கலந்துகொண்டதாக ஏற்கனவே இலங்கை வானெலி அறிவித்திருந்து (சி)

### ஜனதிபதியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை ஜனதிபதியின் செயலை ஏனைய பல எதிர்க்கட்சிகளும் கண்டித்துள்ளன. (சி)

### கருத்துக் கணிப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேசும்போது மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இத்தகையகருத்துக்கணிப்பைதிதாம் எதிர்க்கவில்லைஎன்றும் தெரிவித்துள்ளார்.

ஜனதிபதி பிரேமாவின் சேற்படி முடிவை ஐ. தே. கட்சியின் அதிருப்தியாளர்கள் குழுத் தலைவர்கள் வரதேற்பதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனும் ஐ தே. கட்சிக்குள் நிகழ்ந்த புரட்சியினுலும், ஜனதிபதி மீது குற்றச்சாட்டுக்களை சுமத்த அதிருப்தியாளர்முயல்வதாலும் தோன்றியுள்ள அரசியல்சாசனநெருக்கடிக்கு ஜனதிபதி பிரேமதாசாவின் சர்வசன வாக்கெடுப்பு யோசனை வழிவகுக்கும் என திரு காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார். [க-153]

### திருமதி சிறிமாவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்கா பிரதமராகும் வாய்ப்புகளுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி மனு வெற்றி பெறுமானல் சர்வகட்சிகளையும் (ஐ தே. கட்சி அதிருப்தியாளர்கள் உட்பட) கொண்ட குழு ஒன்றைத் தெரிவுசெய்து அதன் மூலம் பிரதமராக திருமதி சிறிமாவைத் தெரிவு செய்யும் திட்டமொன்றும் இவர்களிடம் உள்ளதாம். [சி-153]

### வீரவணக்கம்

[யாழ்ப்பாணம்]

மணலாறு மாவட்டத்தில் கடந்த 1-ம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் குப்பிளானைச் சேர்ந்த (வைத்திலிங்கம் வசீகரன்) ஆகிய வீரவேங்கை குரு வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

★

இம்மாவட்டத்தில் கடந்த 2-ம் திகதி இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் எம்மவர்களான டென் [செல்வராசா சுதர்சன் மீசாலை], கவாக்கர் (கனகசபை சுமத்திரன் சிறுப்பிட்டி), விஸ்வம் (வீரசிங்கம் சிவராஜ் கோண்டாவில்) ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# உலர் உணவுப் பொருள்கள் சகாய விலையில் விற்பனை

[யாழ்ப்பாணம்]

வர்த்தகத் திணைக்களக் கிளைகள் ஊடாக, இன்று முதல் உலர் உணவுப் பொருள்கள் சகாய விலையில் விற்பனை செய்யப்பட உள்ளன.

அரிசி, மா, சீனி, பருப்பு உட்படத் தற்போது தட்டுப்பாடான உணவுப் பொருள்கள் அனைத்தும், யாழ். மாவட்டத்தில் உள்ள மேற்படி கிளைகளில் இன்று முதல் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக வர்த்தகத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

### பிரேமாவிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உறுப்பினர்கள் நேற்று மாலை சபாநாயகரை பாராளுமன்றில் சந்தித்தனர்.

116 பாராளுமன்ற உறுப்பினர்களும் திட்டவட்டமாக ஜனதிபதி பிரேமதாசாவிற்கு ஆதரவாக இருப்பதாகவும் ஜனதிபதி எச் சந்தர்ப்பத்திலும் அரசியல் அமைப்பை மீறவில்லை யென்றும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட பிரேரணையில் பெறப்பட்ட கையொப்பங்கள் சில உண்மையில்லை என்பதும் சிலரின் கைஒப்பங்கள் தவறுன முறையில் பெறப்பட்டிருக்கின்றது என்றும் தாம் கருதுவதாக பிரதமர் டி பி. விஜேயதுங்க சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா, திரு. ரணில் விக்ரமசிங்க, ஜனுப் ஏ.சி.எஸ்.ஹமீட் ஆகியோர் தலைமையில் 116 பாராளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகரைச் சந்தித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஜனதிபதிக்கு எதிராக மனுகொண்டுவரும் அவசியம் இல்லை

[கொழும்பு]

ஜனதிபதிக்கு எதிராக மனு ஒன்று கொண்டுவர வேண்டிய அவசியம் தற்போது இல்லை. அவ்வாறு செய்ய வேண்டுமென்றல் அதனை முன்பே செய்திருக்க வேண்டும். அதுவும் ஜே. ஆர், ஜெயவர்த்தனவுக்கு எதிராக செய்திருக்க வேண்டும் என்று முன்னுள் சபாநாயகரும் சுதந்திரக் கட்சி எம். பியும் தற்போது கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளவருமான திரு ஸ்ரான்லி திலகரத்ன கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் ஜனதிபதிக்கு தொலைபேசி மூலம் விபரங்களை கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; இம்மனுவில் தம்மை கையெழுத்திடுமாறு கட்சியினர் கோரியதாகவும் தாம் அதனை மறுத்துவிட்டதாகவும் தாம் இதனை விரும்பவில்லை என்றும் கூறியுள்ளார். [சி-153]

### மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா இராணுவத்தினருக்கு பெரும்சேதமேற்பட்டுள்ளதுடன் முதல்நாள் இடம்பெற்ற சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் 13 வீரவேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

நித்திகைக்குளம் பகுதியில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இப்பகுதியில் இராணுவத்திற்கு உதவியாக அவ்ரோ, பொம்மர் விமானம், பயணிகள் விமானம், ஹெலிகொப்டர்கள் போன்றவற்றிலிருந்து உக்கிர வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன

இதேவேளை நேற்றும், நேற்று முன்தினமும் இப்பகுதியில் இரு பகுதியினருக்குமிடையே இடம்பெற்ற மோதல்களில் ஏற்பட்ட சேத விபரம் பற்றி எதுவும் அறியமுடியவில்லை.

### பதவி நீக்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விடயம் தொடர்பாக முதலில் அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சியினுல் ஜனதிபதி பிரேமதாசாவிற்கு தெரியப்படுத்தப்பட்டது.

ஜனதிபதி காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவருடன் குருநாகலில் உள்ள உல்லாச விடுதியில் தங்கியிருந்த போதே இச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

இதனைக் கேள்விப்பட்டவுடன் ஜனதிபதி கொழும்பு வந்தும் கையெழுத்திட்ட ஐ. தே. க. உறிப்பினர்களின் பெயர்களை அறிய முடியவில்லை.

அரசியல் சட்டத்திற்கிணங்க சபாநாயகர் தான்பெற்ற பிரேரணை அறிவித்தலை ஜனதிபதிக்கு அறிவித்ததோடு ஜனதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாதென்ற அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள விடயங்களையும் கோடிட்டு காட்டியும் இருந்தார்.

அத்துடன் சபாநாயகர், கட்சித் தலைவர்களுக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் விடயங்களை அம்பலமாக்கி, சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இச்சமயத்தில் முன்னுள் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, திரு. பிரேமதாசாவிடம் டெலிபோனில் தொடர்புகொண்டு சட்டத்தை விளக்கி அவருக்கு ஆறுதல் கூறினர்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81,